28வது சாலை பாதுகாப்பு வார விழாவின் (2017) நிகழ்ச்சி நிரல் 26 17/1/17

முதல் நாள் 17.01.2017 (செவ்வாய் கிழமை)

மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட சுங்கச்சாவடி மையங்களில் சாலைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல் மற்றும் வாகனத்தின் பின்புறங்களில் சிகப்பு நிற பிரதிபலிப்பான் ஒட்டுதல்

இரண்டாம் நாள் 18.01.2017 (புதன் கிழமை)

அனைத்து இரு சக்கர வாகன முகவர்கள், ஓட்டுநர்கள் கலந்து கொள்ளும் தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் குறித்த பேரணியை அவரவர் அலுவலகங்களில் நடத்திக் கொள்ளுதல்.

மூன்றாம் நாள் 19.01.2017 (வியாழக் கிழமை)

பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையேயான சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் சிறந்த சாலைப் பாதுகாப்பு வாசகம் எழுதும் போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குதல்.

நான்காம் நாள் 20.01.2017 (வெள்ளிக் கிழமை)

மாவட்டத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கூட்டாக ஓட்டுநர்களுக்கு மருத்துவ முகாம் நடத்துதல்.

ஐந்தாம் நாள் 21.01.2017 (சனிக் கிழமை)

**சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி**

(வேலூர் மாநகர புதிய பேருந்து நிலையத்திலிருந்து வேலூர் மாநகர பழைய பேருந்து நிலையம் வரை)

**(வேலூர் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில்)**

**பங்கேற்பாளர்கள்:-** ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள், வாகன விற்பனையாளர்கள், IRT ஓட்டுநர்கள், அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஓட்டுநர்கள், NSS. ஊர்க்காவல் படையினர் மற்றும் காவல் துறை நண்பர்கள்

ஆறாம் நாள் 22.01.2017 (ஞாயிற்றுக் கிழமை)

அனைத்து முக்கிய சந்திப்புகள், சமிக்ஞைகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஊர்க்காவல் படை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் சாலை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை சாலை பயன்படுத்துவோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

ஏழாம் நாள் 23.01.2017 (திங்கள் கிழமை)

சாலைப் பாதுகாப்பு குறித்த செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளுதல். அதிவேகம், அதிகபாரம், தலைக்கவசம் அணியாமல் பயணித்தல், சீட்பெல்ட் அணியாமல் பயணித்தல், வாகனத்தை ஒட்டும்போது கைபேசியைப் பயன்படுத்துதல் போன்ற விதிமீறல்கள் குறித்த சிறப்பு வாகன சோதனை மேற்கொள்ளுதல்

சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய உறுதிமொழியினை அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்கள், அனைத்து அரசு போக்குவரத்து கழக அலுவலகங்கள் மற்றும் பணிமனைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் எடுத்தல்.

செ.ம.தொ.அ. 17/1/17
வேலூர்- 9.